தனிப்பிரதி – ரூ. 20/-
ஆண்டு சந்தா– ரூ. 200/-

# முத்தமிழ் நேசன்

செப்டம்பர் 2023
மலர் 2 இதழ் 17
இனிக்கும் இலக்கிய இதழ்






## வாழ்த்துகள் ஒருவரை நீண்டகாலம் வாழவைக்குமா..?

*சிறப்புக்கட்டுரை*

– தமிழ்மணி நகுலா சிவநாதன்

**வெளிநாட்டு வாழ் தமிழர்களின் கவிதைகள் சிறுகதைகள்**

என்மேல் ஆசை
இல்லையா..!

வாசலுல மாக்கோலம்
போட்டுப்புட்டு நிமிரயில
ஒத்தப் பார்வையால
சட்டுனு சாச்சவளே

காட்டாத்து வெள்ளமா
மனசுக்குள்ள வந்தவளே
மஞ்சத்தண்ணி தெளிக்கயில
ஏஉசுர கிள்ளுனியே



கண்டுக்காமப் போறதென்ன
அத்தபெத்த ரத்தினமே
அசையாம எனக்குள்ள
தேர்போல நிக்குறியே

பக்கத்துல வரயில
வெலகித்தான் ஓடுறியே
மூச்சுக்காத்து வேகத்துல
முழுசாக் கரைய வைக்குறியே

வாடக்காத்து வீசுதடி.
சோகங்கூடப் பெருகுதடி.
உன்னோட நெனப்பால
எம்மனசு வேகுதடி

கொல்லாமக் கொல்லுறியே
கோவத்தோடப் பாக்குறியே
சொல்லடி மரிக்கொழுந்தே
எம்மேல ஆசயில்லயா

-தமிழ்மாமணி முனைவர் தாழை **இரா.உதயநேசன்**

# முத்தமிழ் நேசன்

## இனிக்கும் இலக்கிய இதழ்

செப்டம்பர் 2023 மலர் 2 இதழ் 17

**நிறுவனர்**

## தாழை இரா.உதயநேசன்

**ஆசிரியர்**

பாரதி சந்திரன்

**ஆசிரியர் குழு**

ஜோ.சம்பத்குமார்
மு.தனஞ்செழியன்
எ.பாவலன்
த.பரிமளா

**கௌரவ ஆலோசகர்**

கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம்

**வடிவமைப்பு**

ம.சேவியர்

**அச்சு**

M.S ஆப்செட் ராயப்பேட்டை



**அலுவலக முகவரி**

முத்தமிழ் நேசன்
எண்:10, முதல் தெரு,ஸ்ரீராமபுரம்
ஆம்பூர் – 635 802
திருப்பத்தூர் மாவட்டம்


## பொருளடக்கம்


**கவிதைகள்**

மோகநாதன் செல்லையா
'அளவையூரான்' நா.கதிர்வண்ணன்
ஆசை
கவிதா பிருத்வி
பவானி சச்சிதானந்தன்
சோ. ஸ்ரீதரன்
டாக். ஜலிலா முஸம்மில்
கனிஸ்டா ரூபன்
மு.தனஞ்செழியன்
ஜெயசித்ரா அமிர்தராஜா
பிரேமா ரமணி வனஜா.உதயகுமாரன்
தமிழ்மணி நகுலா சிவநாதன்
மருத்துவர்.க.கலைவேந்தன்
பி.ஸ்.நாகராஜன்
மணவை பா.சௌந்தர்
S.மகேஷ்

**சிறுகதை**

முனைவர் ஓசூர் மணிமேகலை
புவனா சற்குணம்

**கட்டுரைகள்**

முனைவர் ஜா,திரிபுர சூடாமணி
தமிழ்மணி நகுலா சிவநாதன்


இதழுக்குப் படைப்புகளை அனுப்ப விரும்பும் படைப்பாளிகள்,
யுனிகோட் (unicode) எழுத்துருவில் மட்டுமே தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
mutamilnesan2022@gmail.com

தலையங்கம்

# சாதனைகள் இரண்டு

சந்திரனின் தென்துருவத்தில் சந்திரயான் – 3 யைத் தரை இறங்கிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றிருக்கிறது. 'இஸ்ரோ' இதில் பெரும் சாதனையைச் செய்திருக்கிறது. உலக விஞ்ஞானிகள் அனைவரும் நமது முன்னேற்றத்தினை, இதன் மூலம் கவனத்துடன் உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றனர். சாதனைகள் பல செய்து கொண்டிருக்கிற இஸ்ரோவிற்கு உலக முத்தமிழ் கூட்டமைப்பும், முத்தமிழ்நேசனும் தமது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது. இத்தகு பெருமைகளைக் கொண்ட 'இஸ்ரோ'வில் விஞ்ஞானியாகப் பணிபுரியும் முனைவர் பெ. சசிகுமார் அவர்கள் தொடர்ந்து நமது இதழில் எழுதுகிறார் என்பது நமக்குப் பெருமை அளிக்கும் விடயமாகும்.

அடுத்ததாக, உலக செஸ் போட்டியில், மேக்னஸ் கார்ல்சனுக்கு எதிரான போட்டியில் இந்திய செஸ் வீர்ர் பிரக்ஞானந்தா இரண்டாம் இடத்தில் உலகக்கோப்பையை வென்றிருக்கிறார். இது மாபெரும் வெற்றியாகும். அவரையும் உலக முத்தமிழ்க் கூட்டமைப்பும், முத்தமிழ்நேசனும் வாழ்த்திப் பாராட்டுகிறது. இளைஞர்கள் அனைவரும் இவரை முன் மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது முத்தமிழ்நேசனின் விருப்பமாகும்.

இதழின் சந்தாத் தொகையைச் சிறிது கூட்டி இருக்கிறோம். காரணம் காகிதம் மற்றும் அச்சுப்பதிப்புக்களின் விலை உயர்ந்திருக்கிறது. தொடர்ந்து இதழை இலக்கியவாதிகள் அனைவருக்கும் கொண்டு போய் சேர்க்க வேண்டுமெனப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்.. இது தமிழுக்கு நாம் செய்கிற சிறுதொண்டு. எனவே, தொடர்ந்து அனைவரும் இதழுக்குச் சந்தா செலுத்துங்கள். நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் தெரிவித்து அவர்களையும் இதழின் பங்கில் ஈடுபடச் செய்யுங்கள். நாம் தொடர்ந்து இதழ் மூலமாக தமிழ்த் தொண்டுகளைச் செய்வோம்.



நேசமுடன்,

**பாரதிசந்திரன்**

# கல்லாமை இல்லாமை ஆக்குவோம்

கல்லாதிருப்பது கடி தென்று கண்டோர்க்கே
கல்லாதான் வில்லாள னாவான் பார் விரைந்து!
நல்லவனாய் நாடறிந்த பேர்களுக்கும் அவனால்!
பொல்லாப்பு தான் பிறக்கும் புரி!
கற்றவர்கள் கற்புடையர் எனும் வகையில்!
கல்விக் கண் எல்லோருகும் கொண்டு போய் சேர்க்க வேண்டுகெக்கும் வேண்டும் அறி!
கல்லாத பேர்களினால் எல்லோரும் கலங்கோணும் !
என்பதனால் கற்றலே பிணி தீர வழி!
கல்லாமை எனும் தீயைக் களையோணும்
கருக்கோணும் நம்மிடையே இல்லாமல் ஆக்கோணும் துணி!

*மோகநாதன் செல்லையா*
*யாழ்ப்பாணம், இலங்கை.*

---

( இதழுக்குச் சந்தாக் கட்ட விரும்பும் வாசகர்கள் சந்தாத் தொகையை Google pay வழியாகச் செலுத்தலாம். Google pay No : 9159698466. சந்தாக் கட்டிய பின் தங்கள் முகவரியை இந்த எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலம் தெரியப்படுத்துங்கள். இதழின் வளர்ச்சிக்கும், தமிழின் வளர்ச்சிக்கும் சந்தாக் கட்டத் தாமதிக்காதீர்கள். அச்சுப் பதிப்பாகவும், மின்இதழாகவும், உங்கள் படைப்புகளை உலகம் முழுவதுமிருக்கும் இலக்கிய வாசகர்கள் இவ்விதழ் மூலம் படிக்கின்றனர். எனவே, தொடர்ந்து எழுதவும் செய்யுங்கள்)

## தனிமை என்னும் வரம்

தக்கார் தக்கவுடையார்
தேர்ந்திட தனிமை //

தன்னவளின் பாசம்
தானுணர வைப்பது //

சொந்தங்கள் பந்தங்கள்
சொல்லித் தருவது //

ஆணுக்கும் கண்ணீர்
சுரப்பியைக் காட்டுவது //

அழகானதை மறைக்கிறது
மனதுக்குள் ஆரவாரிக்கிறது //

பூவுக்குள் பூக்கம்பமாகிறது
வெடிகுண்டில் வேதாந்தமாகிறது//

தன்னைத் தனக்கறிவிக்க
தனிமை ஆசானாகிறது //

வாழ்வில் சுட்டிடுமே
தனிமையென்னும் வரம் //

'அளவையூரான்'
**நா.கதிர்வண்ணன்**

# நெஞ்சை விரித்த பலூன்களே...

வெறுப்பு
கோபம்
பொறாமை
எரிச்சல்
கழிவிரக்கம்
ஏக்கம்
எல்லாம்
ஏராளம் உண்டு
என்னிடம்

ஒவ்வொன்றும்
முடிச்சிட்டுக்கொண்டே
உள்ளுக்குள்
விரியும் பலூன் என்று
உணர்ந்தபோது
அவையெல்லாம்
ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டு
நெஞ்சை நெஞ்சை
முட்டித்தள்ளின

நெஞ்சு வெடிக்க
ஒரு நொடி என்றபோதே
உணர்ந்தேன்
பலூன்களின் இடம்
எதுவென்று

எடுத்து
ஒவ்வொன்றாய்
வெளியே பறக்க விட்டபோதுதான்
உணர்ந்தேன்
பலூன்கள் எவ்வளவு
அழகு என்று

அப்போதுதான் உணர்ந்தேன்
நெஞ்சுக்குள்
எவ்வளவு இடம்
இருந்திருக்கிறது
என்று

நெஞ்சை விரித்த பலூன்களே
மறுபடியும்
உள்ளே வந்துவிடாமல்
பார்வையிலிருந்தும்
தொலைந்துவிடாமல்
அங்கேயே பறந்துகொண்டிருங்கள்
எப்போதும்



**ஆசை**



# ஹைக்கூ கவிதைகள்

குட்டிகள் ஆற்றில் சிக்கியது
காப்பாற்றிய மனிதனுக்கு
கைக்கூப்பி நன்றி சொன்னது நாய்!

தாயின் முலையில்
பசியாறும் குரங்குக் குட்டி
இறந்தது அறியாமல்!

யானை பசிக்கு உணவு
கரும்பு கொல்லையில்
விவசாயி தற்கொலை!

ஆன்லைன் கடன்கள்
விலையாய் கேட்டது
வாங்கியவர் உயிரை!

பயிர்களைக் கொன்று நிலக்கரி
சந்ததியின் அழுகுரல்
உணவுப் பஞ்சம்!

அழுகிய தக்காளி
ஆற்றில் மிதக்கிறது
காய்கறி விலை காற்றில்!

விண்ணுக்கு செல்லும் ராக்கெட்
மண்ணுக்கு பயன் தருமா?
ஏழைகள் பஞ்சம் தீர்க்க!

ஒன்றும் அறியாமல்
பாவம் ஏதும் செய்யாமல்
பாலியல் வன்முறை சிறுமிக்கு!



**கவிதா பிருத்வி**
**தஞ்சை.**

# செல்வச் செழிப்பு

ரூபாய்கள் சிக்கனமாய் சேமித்த காலங்களில்
ரொம்பவே மகிழ்ந்த தருணமும் உண்டே
காற்றாய் பறக்கும் தாள் காசினிலே
காணலியே வறுமையின் நிறந்தர ஒழப்பு
போதாத வருமானம் அதிகரித்த செலவினிலே
பார்க்க முடியலியே செல்வச் செழிப்பை

**பவானி சச்சிதானந்தன்**
**கொழும்பு**

# செல்வச் செழிப்பு.

உழைப்பில் கிடைக்கும்
உன்னத வாழ்வு/
வறுமை ஒழிந்து
ஓடும் தாழ்வு/
நட்பும் உறவும்
நாளும் கூடும்/
உணவும் உடையும்
உறைவிடம் சேரும்/
குடும்பம் மகிழ்ந்து
குதூகலம் நிறையும்/
செல்வச் செழிப்பில்
சிறக்கும் குடும்பம்.

**சோ. ஶ்ரீதரன்**
**இலங்கை**

# நேசத்தின் துரும்பு

எல்லாம் இருந்தும்
ஒன்றுமில்லாதது போல்
சில தருணங்கள்...
பாதாளக்கிடங்கு போல்
பயமுறுத்திக் கொண்டும்
அரிக்கும் பெருச்சாளியாய் அண்டவெளியெங்கும்
வியூகம் கொண்டும்
நம் மௌனத்தில்
கட்டாயக் காலாட்படையாய் ஏறிக்கொண்டும்
வெறுமைப் பிராந்தியத்தில்
விதம்விதமான வேதனைகளோடு
பரிதவிக்கச்செய்யும்....

ஆயினும்
பெருமலைபோல்
பேரருவி போல்
பெருவானம் போல்
பெருமழை போல்
பெருநாள் போல்
பெருநம்பிக்கை தருகிறது
ஒன்றுமே
இல்லாவிட்டாலும்கூட
சிறுநேசத்தின்
துரும்பொன்று!



**Dr ஜலீலா முஸம்மில்**
**ஏறாவூர்,இலங்கை**

# அம்மா...

கனிஸ்டா ரூபன்
மும்பை



கருவறையில் கொஞ்சநாள்
கண்ணாம்பூச்சி ஆடியே
உலகிற்கு புதிதாய் ஓர்
உயிர்தரும் தாய்க்கு
சாதித்த தற்பெருமை!

பிஞ்சுப் பாதத்திலே இட்ட
முதல்முத்தத்தில் ஓர்
ஈடில்லா தற்பெருமை!

மழலைமொழி சொல்லும்
அம்மா எனும் முதல்வார்த்தைக்கு
அலாதிய தற்பெருமை!

பூப்பெய்தும் மகளைக்கண்டு
பூரித்து நிற்க்கும் தாய்க்கு
கண்களை நிரப்பும் கண்ணீரில்
கனவோடு ஓர் தற்பெருமை !

திருமண கோலத்தைக் கண்டு
நெஞ்சத்தில் ஏற்படும் ஓர்
நிகரில்லா உணர்வில் தாய்க்கு
நிம்மதியின் தற்பெருமை!

புதிதாய் ஒரு பிஞ்சுக் கால்களுக்கு
மகள் கொடுக்கும் முதல் முத்தத்தில்
திரும்புகிறது இந்தப் பயணம் மறுமுறை
"அம்மா" என்றே...



# நேர்காணல் : பாவலர் கருமலைத்தமிழாழன்

## நேர்காணல் செய்தவர் : பாரதிசந்திரன்

**பாவலர் கருமலைத்தமிழாழன் அய்யா பெற்ற விருதுகள் :** தமிழக அரசின் கபிலர் விருது, தமிழ்ச் செம்மல் விருது , தூய தமிழ்ப் பற்றாளர் விருது. சிறந்த கவிதை நூலுக்கான விருது. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சிந்தனைச் சிகரம் விருது. பல்வேறு இலக்கிய அமைப்புகள் பாவேந்தர் பைந்தமிழ்ச் செல்வர், ஒட்டக்கூத்தர், கவிதைச்செல்வர், தமிழ்மாமணி, வெண்பாவேந்தர், கவிதைக் கருவூலம் , பாவேந்தர் நெறி செம்மல், இலக்கிய மாமணி, இலக்கியச்செம்மல் போன்ற விருதுகளை வழங்கிசிறப்பு செய்துள்ளன. 50 ஆண்டுகள் இலக்கியப் பணியைச் சிறப்பிக்கும் வகையில் இந்திய அரசு ரூ.5 விலையுள்ள அஞ்சல் தலை வெயிட்டது. மலர்விழி காவியம் உட்பட 25 கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. 2 கட்டுரை நூல்கள் வெளிவந்துள்ளன.

**மரபுக்கவிதைகளின் எழுச்சிமிக்க காலம் என்று எதைச் சொல்வீர்கள்?**

பொதுவாகச் சங்க காலங்களில் தோன்றிய மரபுக் கவிதைகள் வீரம், கொடை, காதல், ஆட்சி சிறப்பு போன்றவற்றை எடுத்து கூறும் நோக்கம் கொண்டதாக அமைந்தது. பெருங்காப்பியங்கள், சிறு காப்பியங்கள் எல்லாம் மரபிலேயே இயற்றப்பட்டன. இதனைத்

தொடர்ந்து இடைக்காலத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்களும் மரபுக் கவிதைகளாகவே அமைந்தன. அவ் இலக்கியங்கள் இறைவனைப் பற்றியதாகவும், இறைவன் குடி கொண்டிருக்கக் கூடிய திருத்தலங்களைப் பற்றியதாகவும் அமைந்திருந்தது.அதனை அடுத்த காலங்களில் மருத்துவம், தத்துவம் சார்ந்த சித்தர்களின்பாடல்களும்மரபிலேயே இயற்றப்பட்டன. கவிதைகள் அந்த அந்த காலங்களுக்கு ஏற்ற வகையில் தங்களுடைய நோக்கங்களை கொண்டிருந்தமையைக் காணலாம்.ஆரம்ப காலம் தொட்டு சுமார் 19 ஆம் நூற்றாண்டு வரைக்கும் இலக்கியம் என்றாலே மரபுக் கவிதை தான் எனும் அளவுக்கு மரபுக் கவிதைகளின் செல்வாக்கு மிகுந்து காணப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டில் பாரதியார், பாரதிதாசன் அவர்களைத் தொடர்ந்து மரபுக் கவிதைகள் சமூகப் பிரச்சனைகளைச் சுட்டுவதாகவும், பெண் விடுதலை பற்றியதாகவும், தமிழின் வள்ர்ச்சி பற்றியதாகவும் அமைந்திருந்தன. சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மரபுக் கவிதைகளின் எழுச்சிக் காலமாகவே திகழ்ந்தது.

## நவீன படைப்பிலக்கிய காலத்தில், மரபுக்கவிதைகளின் நிலை என்னவாக இருக்கிறது. இருக்கும்?

பண்டைய இலக்கியம் அடிப்படையான அறவிழுமியங்களையும் தத்துவங்களையுமே பேசும். நவீன இலக்கியம் அரசியலையும் சமூகப்பண்புகளையும் நேரடியாகப் பேச ஆரம்பித்தது. இந்த அம்சங்களைக்கருத்தில்கொண்டால் தமிழில் நவீன இலக்கியத்தின் தொடக்கம் என்பது பாரதியில் இருந்து வந்தது எனலாம்.

நவீன இலக்கியம் அச்சு ஊடகத்தில் வெளிவந்தமையால் உரைநடை மையப்போக்காக உருவாகியது. புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் போன்ற வடிவங்கள் உருவாயின. இந்த ஒவ்வொன்றிலும் முன்னோடிகள் தமிழில் உள்ளனர். புதினத்திற்கு மாயூரம் வேதநாயகம் பிள்ளை, அ.மாதவையா, ராஜம் அய்யர் ஆகியோர் முன்னோடிகள். சிறுகதைக்கு வ.வெ.சு.அய்யர் முன்னோடி. இவர்களனைவரும் நவீன இலக்கியத்தின் முன்னோடிகள்.இவர்களின் காலத்தைக் கொண்டு பார்த்தால் 1880 முதல் 1925 வரையிலான காலகட்டம் நவீன இலக்கியத்தின் தொடக்கக் காலகட்டம். அதன்பின் 1950 வரையிலான காலகட்டம் வளர்ச்சிக் காலகட்டம். இன்றுவரையிலான இலக்கியத்தை ஒட்டுமொத்தமாக நவீனக் காலகட்டம் என்கிறோம்.

புதுக்கவிதை வடிவங்களாக ஹைக்கூ (துளிப்பா), சென்ரியு (நகைத் துளிப்பா), லிமரைக்கூ (இயைபுத் துளிப்பா), ஹைபுன், குறட்கூ, சீர்க்கூ, கஸல் என்னும் வகைகளும் புதுக்கவிதையின் சாராம்சமாய் இன்று எழுதி வருகிறார்கள். புதுக்கவிதை எழுதுவதில் சிறப்பைப் பெற்றவர்கள் அனைவரும் மரபுக் கவிதை எழுதுவதில் தேர்ந்தவர்கள் தாம். புதுக்கவிதைகள் நிறைந்த இக்காலத்திலும் மரபுக் கவிதைக்கு இருக்கும் மதிப்பு குறையவில்லை.

**தமிழில் சிற்றிதழ்கள் இன்று எவ்வாறு செயல்படுகின்றன. ஒரு காலத்தில் கோஷ்டி கோஷ்டியாகப் பிரிந்து தனி நபர் துதி பாடிக் கோண்டும், திட்டிக் கொண்டும் இருந்தன்வே, அது இன்றும் தொடர்கிறதா?**

தமிழ் இலக்கியத்திற்குச் சிற்றிதழ்கள் ஆற்றிய ஆற்றும் பணி சிறப்பான பணியாகும். தமிழ் இதழியலில் எண்ணிக்கையிலும், ஆழத்திலும், பரப்பிலும் சிற்றிதழ்களே மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. சிற்றிதழ் என்பது தனக்கென ஓர் உள்ளடக்கத்துடன் ஒரு குறிப்பிட்டவாசகர்களைச்சென்றைடையும் இதழ் ஆகும். கட்டுரை கருத்துரை விமர்சனம் திறனாய்வு நேர்காணல் செய்யுள் கவிதை உரைவீச்சு சிறுகதை தொடர்கதை துணுக்குகள் த,சித்திரக்கதை, நகைச்சுவை எனப் பல்வேறுவகைப்பட்ட ஆக்கங்களை ஒரு சிற்றிதழ் தாங்கிவரும். சிற்றிதழின் முதன்மை நோக்கம் கருத்துப்பகிர்வே. அதாவது வணிக நோக்கில் இலாபம் ஈட்டுவதைச் சிற்றிதழ் பொதுவாக முதன்மைக் குறிக்கோளாய் கொள்வதில்லை.

இலக்கிய இதழ்களாக தொடக்க காலத்தில் வெளிவந்த வெளியீடுகள் பல பொதுவாசகர்களைச் சென்றடையவேண்டும் என்னும் நோக்கம் கொண்டவை. ஆகவே இலக்கியத்துடன் அரசியல்செய்திகளையும் சினிமா, இசை போன்ற கேளிக்கை சார்ந்த செய்திகளையும் வெளியிட்டன. வரவேற்பு இல்லாமல் அவை தேய்ந்து மறைந்தன.

மணிக்கொடி கலாமோகினி சிவாஜி கணையாழி தீபம் ஞானகங்கை,ஓம் சக்தி,புதுயுகம் பிறக்கிறது,காலச்சுவடு,உயிர்மை, புன்னகை, முல்லைச்சரம், தமிழ்ப்பணி, தெசிணியின் கவிதை, வல்லமை, எழுகதிர், தென்மொழி, உரத்தசிந்தனை, இலக்கியச் சோலை, மகாகவி, சங்கு, இனிய உதயம், இனிய நந்தவனம், கதம்பம், கொலுசு, அமுதசுரபி, இலக்கியப்பீடம் என முப்பதிற்கும்மேற்பட்ட சிற்றிதழ்கள் வெளிவருகின்றன.சிற்றிதழ்கள் பெரும்பாலும் தனக்கென ஒரு கொள்கை, கோட்பாட்டை வகுத்துக் கொண்டு வெளியிடுகிறார்கள். இன்று சிற்றிதழ்களிடையே கோஷ்டி பூசல் என்பது அவ்வளவாக இல்லை. தனி நபர் புகழ்பாடுபவையாகச் சில இதழ்கள் இருந்தாலும் பெரும்பாலும் நடுநிலையோடுதான் செயல்படுகிறது.

**குறிப்பிடும்படியான தமிழ்ப்பணியைச் செய்த சில சிற்றிதழ்களின் பணியையும், அவை இலக்கிய வளர்ச்சிக்கு உதவிய நிலையையும் கொஞ்சம் விளக்குங்களேன்?**

தென்மொழி, தெளிதமிழ், தமிழ்வளம், வெல்லும் தூய தமிழ் போன்ற இதழ்கள் தனித்தமிழ் இதழ்களாக வெளிவருகின்றன. பிற மொழி கலப்பில்லாமல் தூய தமிழில் வெளிவருகின்றன. இவ்விதழ்களில் வெளிவரும் கவிதை, கட்டுரை, கதைகள் எல்லாம் வேற்று மொழி கலவாமல் எழுதப்படுபவை. இந்த இதழ்களில் எழுதுபவர்களும் பிற மொழி கலவாமல் தூய தமிழில்தான் எழுதுகிறார்கள். இந்த இதழ்களால் மணிப்பிரவாள நடை ஒழிக்கப்பட்டது. சங்கப் பாடல்களைப் போன்று பெருஞ்சித்திரனார் பாடல்களைத் தென்மொழியில் எழுதினார்.

இந்த இதழ்கள் தனித்தமிழில் எழுத எங்களைப்போன்ற படைப்பாளர்களுக்கு ஆர்வம் ஊட்டியன. பாவேந்தர் பாரதிதாசன் பரம்பரைப் போன்று தனித்தமிழுக்கு மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் பரம்பரை உருவாகியது. கண்ணதாசன், கடிதம் போன்ற இதழ்கள் சொற்கோலம் என்ற தலைப்பில் புதுக்கவிதைகளை வெளியிட்டன. அதே நேரத்தில் வெண்பாப் போட்டிகளையும் நடத்தி மரபினையும் காத்தன. தொடர் கதைகள், சிறுகதைகள்,

இலக்கியக் கட்டுரைகள் என தமிழுக்கு ஆக்கம் சேர்த்தன. கணையாழி, கசடதபற, எழுத்து போன்ற இதழ்கள் நவீன இலக்கியத்திற்கு வித்திட்டு வளர்த்தன. தமிழுக்குக் கவிதையில் புதிய வடிவங்களை அறிமுகம் செய்தன. உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. சங்க இலக்கியம், காப்பிய இலக்கியங்களிலிருந்து மாறுபட்ட தற்கால இலக்கியத்திற்கு இன்றைய சிற்றிதழ்கள் பெரிதும் பணியாற்றி வருகின்றன. புதிய இலக்கிய வரலாறு எழுதுகின்ற வகையில் படைப்புகள் வருகின்றன. படித்த புலவர்கள் மட்டுமன்றி பாமரரும் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் இவ்விதழ்களின் படைப்புகள் குக்கிராமங்களிலும் கோலோச்சுகின்றன.



பாவலர் கருமலைத்தமிழாழன்

**இணைய இதழ்களால் சிற்றிதழ்களுக்குப் பாதிப்புண்டா? தற்போது வெளிவரும் சில இணைய இதழ்களின் தனித்துவம் என்றால், எதைக் கூறுவீர்கள்?**

இணைய இதழ்களால் சிற்றிதழ்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை. ஏனெனில் கற்றறிந்த கணினி இயக்கத் தெரிந்தவர்களால் தான் இணையவழி இதழ்களைப் படிக்க இயலும். தொலைப்பேசியின் வாயிலாகப் படிக்க இயலும் என்றாலும் இதழ்களைக் கையில் வைத்துக் கொண்டு நேரில் படிப்பதைப் போல கைப்பேசியில் முடிவதில்லை.

இணைய இதழ்களின் தனித்துவம் என்றால் இணையத்தில் ஏற்றிய அடுத்த நொடியே உலகின் எந்தப் பகுதியில் இருப்பவர்களும் படிக்க இயல்வதுதான். படித்த உடனே கருத்துகளையும் மின்னஞ்சல் வாயிலாகவே தெரிவித்து விடலாம். அச்சு இதழ்களை விட இணைய இதழ்களில் உலகின் எந்தப் பகுதியில் இருப்பவர்களின் படைப்புகளையும் உடனடியாக வாங்கித் தருவதற்கு இயலும்.

**உங்களுக்கு பிடித்தமான சில மரபுக் கவிஞர்களை குறித்து அவர்கள் கவித்திறன் குறித்து கூறுங்கள்?**

சமீபத்தில் மறைந்த கவிஞர் வேழவேந்தன் சிறந்த மரபுக் கவிஞர். அதேபோல் முனைவர் கடவூர் மணிமாறனும் மரபை விட்டு விலகாத கவிஞர். பாவேந்தர் பாரதிதாசனின் பரம்பரைக் கவிஞர்கள் என்றும் இவர்களைக் கூறலாம். தமிழ்மொழி வளர்ச்சி, பெண்விடுதலை, சாதி,மத ஏற்றத்தாழ்வை எதிர்த்தல், அரசியல் அவலங்களைச் சாடுதல், சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டுதல், இயற்கையைப் பேணுதல் போன்ற கருத்துகளை மையமாக வைத்து எழுதியக் கவிதைகளால் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

**சமகால புதுக்கவிதை எழுத்தாளர்களில் தங்களை யார் யாரெல்லாம் கவர்ந்தவர்கள்?**

கவிக்கோ அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், சிற்பி, அப்துல் காதர்,மீரா, புவியரசு போன்ற கவிஞர்கள் மரபில் தோய்ந்தவர்கள். அவர்களின் புதுக்கவிதைகள் மரபைப் போலவே சந்தம், எதுகை, மோணைகள் கொண்டிருக்கும். எடுத்துக் கூறும் கருத்துகள் சமுதாய மேம்பாட்டிற்குத் துணை செய்யும் வகையில் அமைந்திருக்கும்.

**தமிழக அரசு இலக்கியத்தை வளர்ப்பதற்கு இன்னும் என்ன செய்தால் சிறப்பாக இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்?**

தமிழ்வளர்ச்சித் துறை, அகரமுதலி திட்ட இயக்ககம், உலகத் தமிழாராய்சி நிறுவனம், தமிழ் பண்பாட்டு மையம், இயல் இசை நாடக மன்றம் போன்ற துறைகளின் வாயிலாக முத்தமிழை வளர்ப்பதற்கான பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. காலச் சுணக்கம் இல்லாமல் இத்திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்த வேண்டும்.

பொது நூலகங்களுக்கு ஆண்டு தோறும் நூல்களை வாங்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அரசு நூலகங்கள் உள்ளன. அந்த மூவாயிரம் நூலகங்களுக்கும் நூல்கள் வாங்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்படும் நூல்களுக்கு மூவாயிரம் படிகளுக்கு ஆணை வழங்க வேண்டும். நூல்கள் வாங்க அரசு நிர்ணயிக்கும் தொகை மிகவும் குறைவு அந்தத் தொகையை உயர்த்த வேண்டும்.

பூவிற்கு என்ன வயதிருக்கும் நாட்களெல்லாம் சுருக்கங்கள் வராமல் இருக்கிறதே.
தூரத்தே போய் நின்ற வானத்தைத் திரும்பி வா என்று அழைக்கின்றன.
எட்டிய தூரம் வரை நறுமணத்தை நீட்டிப் பார்க்கின்றன.
பகலை விட இரவில் தான் அவை வண்ணங்களைக் காட்ட நினைக்கின்றன.
பூ உதிர்ந்து விழுவதெல்லாம் சாகசங்களுக்காக அல்ல. சிறகுகள் முளைத்தவுடன் புதிய இடம் தேடிச் செல்கின்றன...

மு.தனஞ்செழியன்

சிறுகதை



# விதைக்கப்படும் வீரம்!

அன்று காரியாபட்டி கிராமமே சோகத்தில் மூழ்கி இருந்தது. எங்கு பார்த்தாலும் இராணுவவீரர் சூரிய குமாரின் படம் தாங்கிய பெரிய பதாகைகள் அஞ்சலியுடனும் வீர வணக்கத்துடனும்.

“ஏ.... சாமி.... சூர்யா... எங்கள விட்டு எப்படிய்யா போன....” என்று நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறி அழும் தாய் லட்சுமியையும் தந்தை கோவிந்தனையும் கண்டு ஊரே அழுதது. சூர்யாவின் தம்பி வீராவும் தங்கை அர்ச்சனாவும் “அண்ணா... சூர்யாண்ணா.... எந்திரிண்ணா....” என்று அழுத காட்சி கல்மனத்தையும் கரைத்து விடும் .

நண்பர்களும், உறவினர்களும், ஊர்மக்களும் நாட்டுக்காகத் தன்னுயிரை இழந்த வீரன் சூர்யாவிற்குக் கண்ணீருடன் புகழஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தனர்.

இந்திய எல்லையில் தீவிரவாதிகளுடன் போரிட்டு, தீவிரவாதிகளைச் சுட்டுக் கொன்று, துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாகி, உயிர்த்தியாகம் செய்த சூரியகுமார் என்ற இளவீரன் கிராமத்திற்கு வரும்போதெல்லாம் நாட்டைப் பற்றியும், ராணுவ வீரர்களின் தியாகத்தைப் பற்றியும் அனைவரிடமும் பெருமிதமாகப் பேசுவான். இன்று அதே கிராமத்து மக்களின் முன் தன் நாட்டுப்பற்றையும், தியாகத்தையும் நிரூபித்துச் சலனமற்று மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டான். சுற்றுப்பட்டு ஊர்மக்கள், அமைச்சர், அரசு அதிகாரிகள் அஞ்சலி செலுத்த, இராணுவ மரியாதையுடன் சூரிய குமாரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அழுது அழுது கண்ணீரே வற்றிய நிலையில் கோவிந்தனும் இலட்சுமியும் சிறிது சிறிதாகத் துக்கத்திலிருந்து வெளியே வந்து வயல் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தனர். மகள் அர்ச்சனா சென்னை கல்லூரியில் விடுதியில் தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறாள். மகன் வீரா படித்து முடித்து விட்டான். அடுத்து என்ன செய்வது

என்ற சிந்தனையில் பெற்றோர் இருவரும் மூழ்கி இருந்தனர்.

“மாசம் ஓடிருச்சுங்க.... நம்ம சூர்யா எப்ப வருவான்னு... தூக்கத்தில அடிக்கடி திடுக்குனு... முழிச்சிடுறேங்க....” கண்ணீருடன் பேசிய மனைவியைச் சமாதானப்படுத்த முடியாமல் துண்டால் வாய்மூடி அழுதார் கோவிந்தன்.

“அம்மா.... இராணுவத்தில சேர விண்ணப்பிச்சிருந்தேன்மா... நாளைக்குச் சென்னையில எனக்கு இன்டர்வியூ.... ராத்திரி கிளம்பனும்மா....” என்று மகன் வீரா கூறிக் கொண்டிருக்கும்போதே ‘டேய்... என்னடா சொல்ற... ஒருத்தன பறிகொடுத்தது போதாதா.... நீ போகக்கூடாது....நாங்க விடமாட்டோம்....” என்று பைத்தியம் பிடித்தவள் போலக் கத்தினாள் இலட்சுமி.

“தம்பி... வேணாம்ப்பா... இந்த வேலை..... படிச்ச படிப்புக்கு ஏத்தாப்புல வேலையப் பாத்து எங்க கூடவே இருப்பா....” என்று அமைதியாக மகனிடம் கூறினார் கோவிந்தன்.

“என்ன சொல்றீங்கப்பா.... அண்ணன் இருக்கிறப்பவே முடிவு பண்ணதுதானே.... நான் கண்டிப்பா போவேன்...” மகன் பேசப்பேசத் தாங்க முடியாமல் எழுந்து வந்த இலட்சுமி “உன் கால்ல விழுறேன் ஐயா.... நாங்க சொல்றத கேளு வீரா....” என்று அவனைக் கட்டிக் கொண்டாள்.

“அம்மா... வீரக்குமார்னு பேர் வச்சீங்களே..... ஏம்ப்பா..... நாட்டுக்காக நான் உழைக்கிறது தப்பா.... சொல்லுங்கப்பா...” மகன் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் பரிதாபமாக மனைவியைப் பார்த்தார் கோவிந்தன்.

“பெத்தவங்க மனச புரிஞ்சுக்க தம்பி.... நீ தான் எங்களையும் தங்கச்சியும் பார்த்துக்கணும்.... அவன் தான் ஒரு கல்யாணம் காட்சினு இல்லாம போயிட்டான்.... உன்னை அப்படி விட முடியாது கண்ணு.... வேற வேலை பார்த்து நீ நல்லா இருக்கணும் ஐயா.... இல்லனா நாங்க அழுது அழுதே செத்துருவோம்....” என்று அவன் கையைப் பிடித்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டு அழுதாள் இலட்சுமி.

தாயின் கண்ணீரையும் தகப்பனின் சோகத்தையும் பார்க்கச் சகிக்காமல் கண்களை மூடிக்கொண்டு மூலையில் அமர்ந்தான் வீரா.

எப்படியோ மகனைத் தடுத்து விட்டோம் என்று சிறிது மனம் நிம்மதி அடைந்தனர் இலட்சுமியும் கோவிந்தனும்.

’கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்’ என்பது போலச் சிறிது சிறிதாக அவனிடம் மனமாற்றத்தை உண்டாக்கும் முயற்சியில் அவர்களுக்குக் கிட்டியது வெற்றியே.

வீராவின் படிப்பிற்கும் தகுதிக்கும் பல நிறுவனங்களில் இருந்து அழைப்பு வந்தது. பெற்றோர் பேச்சை மீற முடியாமல் ஒரு பிரபல நிறுவனத்திற்கு நேர்காணல் சென்று, தேர்வாகி பணியில் சேர கடிதம் பெற்றான் வீரா.

“அம்மா... அப்பா.. எனக்குப் பெரிய ஐ.டி கம்பெனியில வேலை கிடைச்சிருச்சு சென்னையில.... நாளைக்கு சேரப் போறேன்... இப்போ உங்களுக்கு நிம்மதிதானே...”

“வீரா... கண்ணு.... நாங்க சொன்னதைக் கேட்டு ராணுவத்துக்குப் போகாம இருந்தியே அதுவே சந்தோசம்ப்பா... இப்பத்தான்



நிம்மதியா இருக்கு...” என்ற இலட்சுமி அவன் கன்னத்தை வழித்துத் திருஷ்டி சொடக்கினாள்.

“நல்ல வேளப்பா... நீயும் மிலிட்டரிக்கு போய் இருந்தா நானும், உங்க அம்மாவும், தங்கச்சி அர்ச்சனாவும் ரொம்ப வேதனை பட்டுருப்போம்... அவ இந்த வருஷத்தோடு படிப்ப முடிச்சிடுவா. அவளுக்கு முதல்ல கல்யாணம் பண்ணிட்டு, உனக்கும் பொண்ணு பாக்க ஆரம்பிச்சிடனும்..” கோவிந்தன் மகிழ்ச்சியுடன் மகனைப் பார்த்துக் கூறியதும் அப்பாவின் கைகளை ஆறுதலாகப் பற்றிக் கொண்டான் வீரா.

“ஆமாம் தம்பி... இனிமேல் ராணுவங்கிற பேச்சையே மறந்துடுவோம்.... என் பிள்ளையோட அது போச்சு.... நம்ம குடும்பம், நம்ம வேலைன்னு நிம்மதியா சந்தோஷமா இருப்போம்...” என்று கூறி நிமிர்ந்து சுவற்றில் மாட்டியிருந்த சூரியகுமார் புகைப்படத்தைப் பெருமூச்சுடன் பார்த்தாள் இலட்சுமி.

“அர்ச்சனாக்கு ஒரு போன் போட்டுச் சொல்லிடுப்பா... அவ அங்கிட்டு... நாம இங்கிட்டு... ஆளாளுக்கு ஒரு இடத்துல இருக்கோம்.....

“ஆமாம்மா.... முதல்ல ஸ்வீட் எடுத்துக்கோங்க இரண்டு பேரும்...” என்று அம்மாவிற்குப் பிடித்த கருப்பட்டி சிலேபி நிறைந்த அட்டைப்பெட்டியை நீட்டினான் வீரா.

“அது இருக்கட்டும்... அப்புறம் சாப்பிடலாம்... முதல்ல போன் போடு நாங்களும் பேசி நாளாச்சு... எப்ப வர்றான்னே தெரியல....” என்று அப்பா கூறியதும் இனிப்பை மேசையில் வைத்து விட்டுச் சட்டைப் பையில் இருந்த கைப்பேசியை எடுத்தான் வீரா.

தெருமுனையில் ஆட்டோ சத்தம் கேட்டது. யார் என்று மூவரும் வாசலைப் பார்த்தனர்.

ஆட்டோவில் இருந்து இறங்கி, கைப்பையை தோளில் போட்டபடி துள்ளல் நடையுடன் வந்து கொண்டிருந்தாள் அர்ச்சனா.

என்ன..இவ..வர்றேன்னு போன் கூடப் பண்ணல.....

மூவருக்கும் வியப்பு. நல்ல உயரம், உடல்வாகு கொண்ட அர்ச்சனா வருவதையே பார்த்துக் கொண்டிருந்தனர். மகளின் கம்பீரத் தோற்றம் பற்றிப் பெற்றவர்கள் இருவருக்கும்

பெருமைதான். ‘என்னம்மா... என்னப்பா... வீராண்ணா ஏன் இப்படி பாக்குறீங்க...‘ சிரித்துக்கொண்டே வீட்டினுள் நுழைந்தாள் அர்ச்சனா.

“என்னடி இது... திடுதிப்புன்னு சொல்லாம கொள்ளாம...” என்ற இலட்சுமியை இடைமறித்து,

“இரும்மா.... சொல்லத்தான் வந்திருக்கிறேன்.... கொஞ்சம் மனச திடப்படுத்திக்கோங்க....” என்று மீண்டும் சிரித்தாள்அர்ச்சனா.

வயிற்றில் புளியைக் கரைத்தார்போல் உணர்வுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர் கோவிந்தனும் லட்சுமியும்.

“காதல்.. கீதல்னு... விழுந்துட்டாளோ எவனையாவது கூட்டிட்டு வந்திருக்காளோ...” என்று கலக்கத்துடன் வாசலைப் பார்த்தான் வீரா.

“இருங்க வந்தவுடனே சொல்லணுமா... தண்ணி கூடக் குடிக்காம...” என்று சமையலறைக்குச் சென்று தண்ணீர் குடித்து விட்டு முன்னறைக்கு வந்தாள் அர்ச்சனா.

“அப்பா.. அம்மா.. உக்காருங்க முதல்ல... என்று அப்பா அம்மாவின் தோளைப் பிடித்துச் சோபாவில் அமர வைத்தாள்.

“என்ன வீராண்ணா.. நீயும் உட்காரு”

“நிச்சயம் இது காதல் பிரச்சனை தான்...” என்று உறுதிப்படுத்திக் கொண்டான் வீரா. அவனுள் கோபம் கொப்பளித்தது.

“எல்லாரும் நான் சொல்றதை பொறுமையா கேளுங்க..” என்று கைப்பையைத் திறந்து எதையோ தேடினாள்.

வீராவின் மனம் அடித்துக் கொண்டது “பத்திரிக்கை கூட அடிச்சிட்டாளோ...இல்ல பையனோட போட்டோவா இருக்குமோ...” குழம்பினான் வீரா.

ஒன்றும் புரியாமல் படபடப்புடன் அமர்ந்திருந்தனர் கோவிந்தனும் இலட்சுமியும்.

“எனக்கு ராணுவத்தில சேர அழைப்புக் கடிதம் வந்திருக்கு... நான் சேரப் போறேன்.... என்று உறுதியாகக் கூறி கைப்பையிலிருந்து எடுத்த கடிதத்தை நீட்டினாள் அர்ச்சனா. மூவரும் திடுக்கிட்டனர்.

“என்னடி சொல்ற.... தலைசுற்றியது இலட்சுமிக்கு. எழ முடியாமல் சோபாவில் சாய்ந்தாள்.

“என்னம்மா... அர்ச்சனா.... வாய் குழறியது கோவிந்தனுக்கு.

எதுவும் பேச முடியாமல் திகைத்து நின்றான் வீரக்குமார்.

“சூர்யா அண்ணன் ராணுவத்தில் சேர்ந்தப்பவே.. எனக்கும் இந்த ஆர்வம் வந்துச்சு... சூர்யா அண்ணனிடம் மட்டும் சொல்லி இருந்தேன்... உங்க யாருக்கும் தெரியாம.. சென்னையில ராணுவப் பயிற்சி எடுத்தேன்...பரீட்சை எழுதினேன்.. இப்ப ஆர்டர் வந்திருக்கு....” என்று பேசிய மகளைப் பேரதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தனர் பெற்றோர்.

தங்கையைத் தவறாக நினைத்து விட்டோமே என்று மனம் வருந்தினான் வீரா. பெற்றோர்களை எதிர்க்க முடியாமல் நிராசையாகி போன தன் விருப்பம் அவளால் நிறைவேறப் போகிறது என்பது மகிழ்ச்சிதான். இருந்தாலும்... அவள் ஒரு பெண்....

“ஏம்மா... நீ ஒரு பெண்.... இது எப்படிம்மா ஏத்துக்க முடியும்.....” தயங்கித் தயங்கிக் கூறினான் வீரா.

"பொண்ணுனா.... இது என் நாடு இல்லையா அண்ணா.... எனக்கு நாட்டுப்பற்று தேவை இல்லையா.... எத்தனை பெண்கள் ராணுவத்துல சாதிச்சிட்டு இருக்காங்கன்னு போய்ப் படிச்சுத் தெரிஞ்சுக்கங்க முதல்ல..... அம்மா... அப்பா... நீங்க வீரா அண்ணனைத் தடுத்த மாதிரி என்னத் தடுக்கணும்னு கனவுல கூட நெனைக்காதீங்க.... சூர்யா அண்ணனோட ஆசையை நான் நிறைவேத்துவேன்.... அவர் சாதிக்க நினைச்சத நான் சாதிச்சுக் காட்டுவேன்.... இந்த நாடு எனக்குப் பெருமை... அதைப்போல இந்த நாட்டுக்கு நான் பெருமையுடையவளாக இருப்பேன்...." என்று தெளிவாக உறுதியாகப் பேசிவிட்டு அண்ணன் சூரியகுமாரின் புகைப்படத்தை நிமிர்ந்து பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டுக் கண்ணீர் விட்டாள்.

பின் கண்களைத் துடைத்துக் கொண்டு மேசையிலிருந்த கருப்பட்டி சிலேபியை எடுத்துச் சிலையாக நிற்கும் அம்மாவிடமும் அப்பாவிடமும் வீராவிடமும் கொடுத்தாள்.

புகைப்படத்தில் சூரியகுமார் புன்னகை முகத்துடன் காட்சியளித்தான்.



*முனைவர் ஓசூர் மணிமேகலை*

# இனிதின் இனிதாய்..

ஆற்றின் நீளத்தை ஆறும் அறிவதில்லை

வானின் தூரத்தை வானும் அறிவதில்லை

கடலின் ஆழத்தை கடலும் அறிவதில்லை

சுழலும் புவனமும் சுற்றுவதை அறிவதில்லை

விசும்பின்துளி தன் விந்தையை அறிவதில்லை

தென்றல் தன் இனிமையை அறிவதில்லை

பகலவன் தன் ஒளியை அறிந்ததில்லை

விதை தன்னுள் இருக்கும் மரங்களை அறிந்ததில்லை

காற்றும் உயிர்களின் உயிரென அறிந்ததில்லை

வைரமும் தன் ஒளியை அறிவதில்லை.

இயற்கையின் மதிப்பை உணர்ந்த மானுடம்

இவ்வுலகில் தம் மதிப்பை உணரும்போதே

இனிதின் இனிதாய் வாழ்கிறது

**ம.அமிர்தாதமிழரசன்**

# ‘கை’

## ஒரெழுத்து ஒருமொழியின் ஒண்பொருள்கள்

அமிழ்தினும் இனிய தமிழ்மொழியில் ஒரெழுத்துச் சொற்கள் அதிகம் உள்ளன.ஆனால் அதிலும் ஓர் எழுத்துச் சொற்கள் ஒரு பொருளை அல்ல.

பலபொருள்களைப் பல சொற்கள் தருகின்றன. சான்றாக, மா என்ற சொல் மாபூத்தது என்றால் மாமரம் பூத்ததைக் குறிக்கிறது. மாநகரம் என்றால் பெரிய நகரத்தைச்சுட்டுகின்றது. இதுபோல் மா என்ற சொல் பல பொருள்களைத் தருகிறது. அதே போல்’கை’ என்ற ஓரெழுத்துச் சொல் எந்தெந்த இடத்தில் எவ்வாறு பயன்படுகிறது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

தொழிலில் இருந்து எடுக்கப்பட்ட ஓர் இடியம் (idiom)

**கைகாட்டிமரம்:** சாலைகளில் ஊர்களுக்குப் போகும். வழிசொல்லி நிற்கும் வழிகாட்டி மரத்தைக் கைகாட்டி. என்பார்கள். டிராபிக் போலீஸையும் சில இடங்களில் கைகாட்டிப் போலீஸ் என்பதுண்டு.

கைகாட்டிவிட்டா பொழைச்சுக்கிடுவான்: தொழிலைப் பழக்கிக் கொடுத்தால் பிழைத்துக்கொள்ளுவான்.

**கைகாரன்:** பலே பேர்வழி. சமர்த்தன். எதையும் ஒருகை பார்க்கக்கூடிய கெட்டிக்காரன்.

**கைகட்டிச் சேவகம்** – ஒருவன்முன் கைகட்டிநின்று அடிமை வேலை பார்த்தல்.

**கைகண்டபலன்:** அநுபவ பூர்வமான, நம்பிக்கையான பலன்.

**கைக்கழுவி விட்டான்:** கொடுக்க முடியாதென்று மறுத்து விட்டான், டாக்டர்கள்

கைகால் விளங்கலே ஆளுக்கு வாதம்விட்டதைக் குறிக்கும்.

**கைகுளிர:** தாராளமாக.

**கைகூசுது:** கொடுக்க மனம் வராத நிலை.

**கைகூடிருச்சு:** பலன் கண்டாகி விட்டது. சித்தியடைந்தது

**கைகொடுத்தான்:** உதவி செய்தல். (quot) நல்ல சமயத்துக்குக் கைகொடுத்தான்.

**கைவிட்டுவிட்டான்:** உதவி செய்யாமல் ஏமாற்றி விட்டான்.

**கைகொட்டிச் சிரிச்சான்:** எள்ளி நகையாடுதல் கைக் காவலுக்கு இருக்கட்டும்: வேண்டியதற்குமேல் உபரியாக என்று இருப்பில்தயாராக வைத்துக்கொள்வது

**கைக்குட்டை:** முகம் துடைக்கும் சிறு துண்டு.

**கைக்குத்தலரிசி :** நெல்லைப் புழுக்கி, கையால் குத்திய முனை முறியாத அரிசி.பத்தியத்திற்கு ஏற்றது.

**கைக்கூலி:** லஞ்சம், கையூட்டு.

**கைச்சரக்கு:** சொந்தச்சரக்கு, பொய்

**கைச்சரசம்:** ஆண் பெண் கொஞ்சுதல்.

**கைச்சுத்தம்:** திருட்டுத்தனம் இல்லாததைக் குறிப்பது.

**கைச்சுத்தமில்லை:** திருடுவதைக் குறிக்கும்.

**கைச்செலவுக்கு:** பிரத்தியேகச் செலவுக்கு (Pocketmoney).

**கைபழகுதல் :** ஒருவரிடம் வேலை கற்றுக்கொள்ளுதல்

**கைபார்த்தல் :** நோயாளியின் கையைப் பிடித்து நாடி பார்ப்பதைச் சொல்வது.கை ரேகைபார்த்தல்

**கைபார்த்த பிழைப்பு:** பிறர் தயவிலேயே வாழ்வது.

**கைப்பிடித்தல்:** திருமணப் பெண்ணின் கரம் பற்றி மனைவியாக்கிக்கொள்ளுதல், 'தையல் தளிர்க்கை தடங்கை பிடித் தான்' ராமன்

**கையைப்பிடிச்சிட்டான்**: ஓர் ஆண் ஒரு பெண்ணைக் கெட்ட நோக்கத்துடன் கையைப்பீடித்தல்.

**கைபோடுதல்:** மாட்டுக்கு விலைபேச, தரகரிடம் துண்டுக்குள்ளே கையை நீட்டி விரலால்பேரம் பேசுதல்

**கைப்பட எழுதுதல்:** ஆளை விட்டு எழுதாமல் தன்கையாலேயே எழுதுதல். இதற்கு மதிப்புஅதிகம்.

**கைப்பத்திக்கிட்டான்:** பலவந்தமாகப் பறித்துக் கொண் டான்.

**கைப்பாகம்:**பத்தியத்திற்குஏற்றாற்போல், மண்பானைச் சமையல், இன்னும் மருத்துவர் வேண்டாம் என்று சொன்னவற்றை நீக்கி சமைத்தல், (quot) டயட்டில் (quot) இருத்தல்,

**கைப்பிடிச்சுவர்:** படிக்கட்டிலும், மொட்டை மாடி யிலும் பாதுகாப்புக்காகக் கட்டிய சுவர்.

**கைப்பிள்ளை:** இடுப்பில் தூக்கிவைத்துக்கொள்ளும்சிறுபிள்ளை:

**கைப்பெட்டி:**கடகத்தைவிடச் சிறிய, பெட்டியை விடப் பெரிய பனை நார்ப் பெட்டி,ஓலைப்பெட்டி

**கைப் பொறுப்பு :** கை நட்டம்.

**கைமறதி :** அவசரத்தில் மறந்து வைத்து விடுதல் கைமறதியா எங்கெயோ லெக்குத் தப்பாவச்சிட்டேன்,

**கைம்மாறு:** நன்றிக்கடன் செலுத்துதல்

**கைநீளம்:** திருடும் குணம் கொண்டிருத்தல்

**கைமேலே காசு :** ரொக்க வியாபாரம். கையிலே காசுவாயிலே தோசை,

**கையடக்கமா :** சிறியதாக, கைக்குள் அடங்கும்படியாக.

**கையடிச்சுக் கொடுத்தான் :** சத்தியம் செய்து கொடுத்தான்,

**கையாடுதல் :** கை நடுக்கம், முதுமை, பலவீனஅறிகுறி.

**கையாடல்:** இருப்பில் திருட்டுக்கணக் கெழுதி எடுத்தல்.

**கைமாறிருச்சு :** கைமாறிப் போய் விட்டது.

**கை முடை :** செலவுக்கே பணத் தட்டுப்பாடு.

**கை முதல் :** சொந்தமாகப் போட்ட முதல்,

**கைமாத்து :** கைமாற்றுக்கடன். சஸ்பென்ஸ்–அக்கவுண்ட்.

**கை நனைத்தல் :** ஒருவர் வீட்டில் சாப்பிடுதல்.

**கை நஷ்டம் :** லாபமும் போய், அசலிலும் குறைவது.

**கை நாட்டு:** கையெழுத்துப போடத் தெரியாமல் இடது கை பெருவிரல் ரேகை பதித்தல். கீறல் என்றும் பெயர்.

**கை நீளம் :** திருடும் குணம் உள்ளவன்.கையேந்தி நிற்கிறான்.

**கையேந்தி நிற்கிறான் :** பிச்சை யெடுக்கிறான்.

**கையாலாகாதவன் :** ஒரு செயல் ஒழுங்காகச் செய்யத்துப்பில்லாதவன் என்று பொருள். உடல் பலஹீனத்தால் தன் கைகொண்டு எந்தக் காரியமும் செய்ய முடியாமல் இருந்தாலும் அவர்களைக் கையாலாகாதவர்கள் என்று சொல்வதில்லை.

**கையைப் பிடித்தான் :** ஒரு பெண்ணை ஆண் கெட்ட ன்நல்லதி நோக்கத்துடன் நெருங்கிகைப் பிடித்தல்



**கையெழுத்து மறையும் வேளை:** மாலையில் இருள் மனிதர்களின் கைகளிலுள்ள இரேகைகளைப் பார்க்க முடியாத அளவு இருள் மண்டிய நேரத்தைக் கையெழுத்து மறைகிற நேரம் என்பார்கள்.

**கையும் ஓடலே காலும் ஓடலே :** என்ன செய்வது,என்று விளங்காத பதற்ற நிலை, எதிர்பாராத அதிர்ச்சி

**கை வழங்காது:** கைப்பண்டம் கருணைக் கிழங்கு.சுத்தக்கருமி,

**கைலாத்து :** சாரமற்றது. உபயோகமற்றது என்று–பொருள் கூறுகிறது அகராதி.

**கையாந்தகரை:** ஒரு பூடு, கரிசலாங்கண்ணி, கரப்பான் செடி.

**கையாள்:** ஏவின வேலை செய்பவன். ஒரு செயலுக்கு உடந்தையாக இருப்பவன். ஒற்றனாகவும் பணி புரிபவன்.

**கையிருப்பு:** (பேங்கில் இருப்பதுபோக) பணமாகப்பெட்டியில் இருப்பது.

**கையிறங்கிருச்சு :** புகை வண்டிவர அடையாளமாகக் கை காட்டி மரத்தின் நீண்ட சட்டம் இறங்கிவிட்டது. சில ஸ்டேஷன்களில் தூக்கி ஆகாயத்தைப் பார்க்கும். ஆனால் அப்போதும் வார்கள். கை இறங்கிருச்சு என்றுதான் சொல்

கையெடுத்தான் கும்பிட்டான், அவன் என்னைப் பாத்துக்கை யெடுத்திட்டான். சண்டைக் காரன்னாவா பார்க்க முடியும்.

**கையேத்தமாயிருக்கு :** கை ஏற்றம். (quot) இப்ப அவன் ரொம்ப ஏத்தம். ஆளு பேரு, மாகாணம், அதை யேன் கேக்கிறே

**கையோங்கிருச்சு :** போட்டி போட்டுத் தொழில் நடத்தினார்கள். இப்போ தொழில்லே அவன் கை ஓங்கிருச்சு

**கையோடே கூட்டிக்கிட்டுவா:** விட்டு விடாமல் பிடித்துக் கொண்டுவா என்று பொருள்.

**கைராசி:** முகராசி மாதிரி கைராசி வேண்டும். எவ்வளவு சிறப்பாகச் செய்தாலும் கைராசிக்காரனுக்கே வரவேற்பு.

**கைலாகு :** எழுந்து நிற்க, நடக்க கை கொடுத்துஉதவுவது.பெரியவர்கள் வந்தால் மரியாதையாகவணங்கிக் கையை நீட்டி வர வேற்பதும் கைவாகுதான்.

**கைவசம்:** உடனடியாகக் கையில் இருப்பது.

**கைவந்த கலை:** செய்து செய்து பழகி, கைதேர்ந்து விட்ட போது ஏற்படும் தொழில் திறமை.

**கைவாசி:** கைவாகு : சிலருடைய சமையல், சில சில பதார்த்தங்கள் செய்வதில் தேர்ந்திருக்கும். அதுவே கை வாசி, கைவாகு.

**கைவிட்டுவிட்டான் :** சொன்ன சொல்லைக் காப்பாற்றாமல் விடுதல். கட்டியவளைக்காப்பாற்றாமல் விட்டு விடுதல்.

**கைவிரசு:** பிடிச்சீட்டு ஆட்டத்தில் இந்த வார்த்தையை அடிக்கடி கேட்கலாம். கை வரிசைப்படி சீட்டை இறக்க வேண்டும். யாரும் முன்னே போட்டுக் காட்டக் கூடாது. என்று எச்சரிக்கக் கேள்வி கேட்டுத் தனியாக நின்று ஆடுபவர் கூறும் ஆணை.

**கைவிரித்தல் :** இல்லையென்று சொல்லுதல் (quot) கடை யிலே பாவி கையை விரிச்சிட்டான்.(quot)

**கைக்கிளை:** ஒருதலைக் காதல்

**கையாள்:** அடியாள்

**கை அரிவாள்:** சிறிய அறுவாள்

மேற்கண்ட கட்டுரையில், 'கை' என்ற ஒற்றை எழுத்துச் சொல் எந்தெந்த இடங்களில் என்னென்ன பொருளைத் தருகின்றன என்பது விளக்கப்பட்டது.



**முனைவர் ஜா,திரிபுர சூடாமணி**
**சென்னை -72**

## கனவுப் படகுகள்

காகிதத்தைக் கிழித்து
கப்பல் செய்த//

கனா காலங்கள்
காற்றோடு கலந்துவிட//

கற்பனைகள் மட்டும்
கண்ணோடு கவியெழுத//

நிஜங்களை நான்
தேடியே நிற்கின்றேன்//

அத்தனையும் கனவுப்படகுகளாய்
தூரமாய் போனதே//

**ஜெயசித்ரா அமிர்தராஜா**

## *நிழல்*

நிழல் ஒளியின்
ஊடகமாய் திகழ்ந்திடுமே/

திகழ்ந்திடுமே கதிரவனின்
கடிகாரமாய் விளங்கிடுமே/

விளங்கிடுமே கறுப்பு
இனமாய் உலகெங்குமே/

உலகெங்குமே ஒற்றுமையான
உருவமே நிழல்/

**வனஜா.உதயகுமாரன்**
**நோர்வே**

## அறம் செய்ய விரும்பு

அறம்செய விருப்பம்
அவசியம் தேவையே/

விருப்பமின்றிக் கொடுப்பது
வீணான செய்கையே/

எதிர்பார்ப்பு இன்றித்
தருவதே ஈகை/

தனக்கென எண்ணாமல்
கொடுப்பதோ பேரறம்/

ஔவை அரசனுக்குத்
தந்த நெல்லிக்கனி/

அதற்கீடு உண்டோ
அகிலத்தில் என்றும்//

***பிரேமா ரமணி***

## ‘மனம் தேடும் விடியல்’

மனம் தேடும் விடியல் தூரமில்லை//
சினம் கொண்டு வாழ்தல் வாழ்க்கையில்லை//
தினம் முயலும் செயல்கள் தோற்பதில்லை//

**எட்வின் பீரிஸ்**
**யாழ்ப்பாணம்**

நேற்றிரவு உன்னைக்கண்டேன்...
கண்டவுடன் காதல் கொண்டேன்...

இனி குழந்தைகளுக்கு சோறூட்ட பாட்டி வடைசுடும் பழங்கதை வேண்டாம்....சந்திராயன் விண்கலம் இறங்கிய புதுக்கதை போதும் ..

உலகின் ஒரே முதல்வன் எல்லாம் வல்ல இறைவன் படைத்த இயற்கையின் அற்புதம் நீ...உருவில் அழகையும் பெயரில் அறிவையும் கொண்ட குளிர்ச்சிதரும் நீலவானம் வைத்த வெண்குங்குமம் நீ...மதி உன் செல்லப்பெயர்...

திங்களுக்கு ஒருமுறை முழுமையான முகம் காட்டும் திங்கள்...உன்னைத் தொடர்ச்சியாக கண்டாலும் கூசவில்லை கண்கள்...!!!

நீ ஆண்டவன் படைத்த வட்டவடிவ அழகு ட்யூப்லைட்...
உன்னைப்பார்த்தாலே மனசுக்குள் டிலைட்...

ஆறறிவு உருவாக்கிய லைட் எப்பொழுதும் முழுதாய் எரியும்,பழுதானால் மொத்தமாய் எரியாது...
ஆனால் பேரறிவாளன் உருவாக்கிய நீயோ பிறைநிலவாகவும் தெரிகிறாய்,அரைநிலவாகவும் வருகிறாய், முக்காலாகவும் வளர்கிறாய்,முழுநிலவாகவும் ஒளிர்கிறாய்...அடடா..அதிசயம் அற்புதம்...!!!

உன் வெளிச்சமும் குளிர்ச்சியும் உன் மென்மையும் நீ செய்யும் நன்மையும் உன்னை பெண்மையுடன் ஒப்பிட கவிஞர்களை தூண்டும்...
என் சிந்தனை அதைவிட ஒருபடி மேலே தாண்டும்...
இருட்டிலும் வெளிச்சம் தருவதால் நீ பெண்மையாய் கொஞ்சுகிறாய்...அந்த சூரியனையும் மிஞ்சுகிறாய்...!

பூமியை சுற்றி சுழலும் உன்னை நாங்கள் சுற்றி வந்து உன் மடியில் தவழ்கிறோம் இன்று....விரைவில் உன் சுவாசக் காற்றை கண்டுபிடித்து நாங்களும் சுவாசிக்க வேண்டும் என்று...

விரைவில் அதை செய்து காட்டுவோம் அறிவியலால் வென்று..

நீ வானமகள் வைக்கும் வட்ட வெள்ளைப்பொட்டு....
வளர்வதும் தேய்வதும் வாழ்வில் மாறிமாறி வரும் இயற்கை என்று பாடம் சொல்லும் நீ என்றுமே எங்களுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு...!!!

**மருத்துவர். க. கலைவேந்தன்**




# வாழ்த்தும் வாழ்வியலும்

"வாயே வாழ்த்து கண்டாய்" என்று பாடினார் மணிவாசகர். இந்த வாய் ஏன் இருக்கிறது?

அன்பான நல்ல சொற்களை அகங்குளிர பேசுவதற்காகவே! நல்ல சொற்கள் பூங்குழல் ஊதுகின்றன. நல்ல வார்த்தைகள் ,நல்ல வாழ்த்துகள் அகங்குளிர வைப்பன.

வாழ்த்து என்பது புனிதம் நிறைந்தது. உண்மையாக வாழ்த்துபவர் நெஞ்சம் உள்ளம் குளிரும். உவகை பிறக்கும். வாழ்த்துபவரும் வாழ்த்தப்படுபவரும் மனங்களில் பூரிப்பு நிறைந்திருக்கும்.

"பல்லாண்டு வாழ்க" என்று ஒருவரை வாழ்த்தும்போது பலகோடி நூற்றாண்டு வாழ்வதாக எண்ணப்படும். குருவின் வாழ்த்தும் பெரியோரின் வாழ்த்தும், என்றும் பெறுமதி மிகுந்தவை.

பெரியாழ்வார் திருமாலையும் சேந்தனார் சிவனையும் வாழ்த்திய பாடல்கள் இன்றும் எம்மை வாழவைத்துக் கொண்டு இருக்கின்றன. திருப்பல்லாண்டை எமக்கு நினைவுபடுத்துகிறது.

வாழ்த்து சாதாரணம் அல்ல. பெறுமதி மிக்கது. போற்றுதற்குரியது. ஆன்றோர் சான்றோர் வயது முதிர்ந்தோர் வாழ்த்துகள் என்றும் எம்மை வாழ வைக்கும்.

வாழ்த்துகள், நீண்டகாலம் ஒருவரை வாழ வைக்கும். நம்புவீர்களா? ஒரு குழந்தையின் நல்ல செயற்பாட்டைப் பெற்றோர்கள் வாழ்த்துகையில் அக்குழந்தையானது பூரிப்பு அடைகிறது.

மகிழ்கிறது. இன்னும் செய்ய வேண்டுமென்ற உந்துதலைத் தருகிறது. அப்படியாயின் வாழ்த்து எப்போதும் பெறுமதி மிக்கது.

நம்மில் பலர் உணராமல் உள்ளமையும் காண முடிகிறது. கல்லான நெஞ்சமுடன் வாழ்தல் நல்லதல்ல. கனிந்துருகும் நெஞ்சுடனே வாழ்வது சிறப்பு. எனவே

வாழ்த்தும் வாழ்த்தப்படுபவரும் பல்லாண்டு காலம் நீண்டு வாழ்வர் என்பது ஐதிகம்.

சமுத்திரத்தின் மத்தியில் தோன்றும் அலை கரையைத் தொடுவது போல் வாழ்த்துபவரிடம் சென்று மீளும்.

வாழ்த்தும் போது நாம் அன்பையும் நல்லெண்ணங்களையும் விதைத்தால் நாம் வாழ்த்தியவரிடம் அதனைக் கொண்டு சேர்க்கும் வாழ்த்து அலை வலிமையுடையதாக்கும்.

பெரியாழ்வார் தம் திருமொழியில் முதல் பாசுரமாகப் பாடியிருப்பதே பெருமானுக்கான பல்லாண்டுதான். அருளாளர்களே இறைவனுக்கு பல்லாண்டு பாடினார்கள் என்றால் இறைவனின் அருட்சக்தி பெற்றதனால்த்தான்.

ஆகவே நாமும் பிறரை வாழ்த்துவோம். நன்மை பெற்றே வாழ்வோம்.

பயன் கருதா வாழ்த்து பலகோடியாண்டு உங்களை மகிழ்வுடன் வாழ வைக்கும்.

வாழ்க வளமுடன் வாழ்க! பல்லாண்டு என வாழ்த்திப் பாருங்கள்.

வாழ்த்தின் வார்த்தைகள் வானமளவு உங்களை வாழ வைக்கும்.



***தமிழ்மணி நகுலா சிவநாதன்***

# குளிர் நிலவோ காரிகை

குளிர் நிலவோ
கட்டழகுக் காரிகையோ/
மாமலையில் துள்ளிச்
சாடும் அருவியோ/
ஆழ்கடலில் துவண்டு
மறியும் அலையோ/
வான்மதி தழுவிட
மலரும் அல்லியோ/

கதிரவன் மேவிட
விரியும் தாமரையோ/
சிந்துவது சேயின
வதனச் சிறுநகையோ/
பிரம்மன் படைத்தப்
பேரெழில் தேவதையோ/

**பி.ஸ்.நாகராஜன்**
**திருவனந்தபுரம்**

முத்தமிழ் நேசன் மாத இதழ் சந்தா விபரம்:

ஆண்டு சந்தா ரூ.500

இதழ் மாதந்தோறும் சந்தாதாரருக்கு அனுப்பி வைக்கப்படும்.

மின்னஞ்சல் வழியாகப் பெற விரும்புவோர் செலுத்த வேண்டிய சந்தா ரூ.300.

Gpay number : 9159698466

சிறுகதை



# எங்க ஊர் ஆலமரம்

சந்தானம் அந்த ஊரிலே மிகப் பெரும் பணக்காரர், செல்வச் செழிப்பாக வாழ்ந்த அவருக்கு மூன்று பிள்ளைகள், அங்கே பெரிய படிப்பு படிக்க முடியாத நிலை ஏனென்றால் பட்டணத்திற்கே போக வேண்டும், அவருடைய பிள்ளைகள் மூவரும் பட்டணத்திலே தான் உயர் கல்வி கற்கிறார்கள், பச்சைப் பசேலென்ற செழிப்பான காடுகள் நீரோடைகள் விவசாயம் செய்வதற்கு ஏற்பப் பெரிய குளங்கள் பார்க்கவே ஆசையாக இருக்கும்,

கோயில் திருவிழா பதினாறு நாட்கள் தொடர்ந்து நடக்கும், கோயில் பக்கமாகப் பெரியதோர் ஆலமரம் நிழல் பரப்பி நின்று கொண்டிருந்ததது, கிராமத்தில் ஏற்படும் விழாக்கள் விவசாயக் கூட்டங்கள் எல்லாம் அந்த ஆலமர நிழலிலே தான் நடக்கும், அந்த ஊரையே அடக்கக் கூடியதாக அந்த ஆலமரம் கொப்பெறிந்து கிளைகளோடு காட்சி தந்து கொண்டிருந்தது ,அதற்கு அருகிலே ஒரு வேப்ப மரம் கிளை பரப்பி அழகாக இருந்தது கிராமத்துக் குழந்தைகள் வேப்பமரத்தில் ஊஞ்சல் கட்டி ஆடுவார்கள், ஒற்றை ஊஞ்சல் அல்ல, அது பலகை ஊஞ்சல் ஐந்தாறு பேர் ஒன்றாக ஆடலாம், கடவுள் எங்க ஊர் மக்களுக்காகத் தந்தது என்று பெருமை பேசிக் கொள்வார்கள்,

அந்த ஊர் திருவிழா வந்து விட்டது, எந்த நேரமும் மக்கள் கூட்டம் அலை மோதிக்

கொண்டிருந்தது, கோயிலில் அன்னதானம் ஆலமரத்தின் கீழேதான் நடைபெறுவது வழக்கம்,

சந்தானத்தின் நண்பர்கள் கோயில் திருவிழா பார்க்க வந்திருந்தார்கள், மேளக் கச்சேரி நடனம் இப்படி எல்லாம் அந்த ஆலமர நிழலிலே தான் நடக்கும்.

அன்று தேர்த்திருவிழா எல்லோரும் விரதமிருந்து பூசையில் கலந்து கொண்டனர், பூசை முடிய பாட்டு நடனம் மேளக்கச்சேரி எல்லாம் தொடங்கியது, அந்தச் சோலையூருக்கு வருவோர் அனைவருக்கும் உணவு கொடுப்பார்கள், ஏழைகள் , பிச்சை எடுப்பவர்கள் உணவருந்தி விட்டு ஆலமர நிழலிலே தான் படுத்துத் தூங்குவார்கள்,

சந்தானம் அங்கே வருவதைக் கண்டு எல்லோரும் எழுந்து நின்றனர்,

'ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? நான் ஒரு செய்தி சொல்லவே வந்தேன், ' 'நீங்கள் இங்கே படுத்து ஓய்வு எடுக்கலாம் உணவு உண்ணலாம், ஆனால் இடத்தைத் துப்புரவாக வைத்திருங்கள், அதுவே நீங்கள் செய்யும் பெரிய உதவி, 'எல்லோரும் மகிழ்வோடு ஆமாம் ஐயா நாங்கள் எந்தக் கஷ்டமும் தர மாட்டோம், ' 'சந்தானத்தின் மகன் கோபாலனுக்கு நண்பர்கள் நன்றி தெரிவித்தனர்,

மேளக் கச்சேரி தொடங்கியது, நடனமும் தொடங்கியது, எல்லோரும் கண் குளிரக் கண்டு மகிழ்ந்தனர்,

'இந்த ஆலமரம் எத்தனை காலமாக நிற்கிறது ?'

சந்தானத்தின் மகன்' ஐயையோ எனக்கே தெரியாது நான் பார்க்கும் போது இப்படியே தான் நிற்கிறது, ' உண்மையில் இது கடவுள் தந்த அளப்பரிய சொத்து, எத்தனை வசதியாக இருந்து களித்தோம்,

இயற்கை வளங்கள் இறைவன் தந்தது எல்லாம் இழந்து நிர்க்கதியாய் நாம் நிற்கிறோம் ஆலமரம் பறவைகள், மனிதர்கள், எல்லோரையும் அணைத்து நிற்கிறது

**புவனா சற்குணம்.**

கனடா

## வசந்தம்

வான் முகில் கொண்ட மழைத் துளி

பூமிக்கு வசந்தம் /

மலர்ந்துமனம் தரும் பூவின் தேன் கள்

வண்டுக்கு வசந்தம் /

கூந்தலில் சூடிய மலர்களின் வாசனை
காளை யர் கக்கு வசந்தம் /

தேனை குடிக்க வரும் சிலந்தி கள்

பார்த்துச் சிட்டு க் குருவி க்கு வசந்தம்/

**மணவை பா.சௌந்தர்**

# கேள்விக்கணைகள்!



நிரந்தரமில்லை எனில்
நிஜமா பொய்யா
யார்
ஏன் எப்படி
எனக் கேள்விகள்
மிகுந்து மிதந்து
விடைகளில்லா
கேள்விகளைத்
தவிர்த்து
தினம் தினம்
பரியாத புதிர்களை
அவிழ்த்தலில்
கவிழ்கிறது காலம்

இனியேதும்
இயலாது
சுயமோ அல்லது
ஏதோ ஓர்
கட்டளையின் பொருட்டு
பூமி
இயங்கிக் கொள்கிறதென
கடக்கையில்

அண்டபேரண்டம்
பெருவெளி

எனப்பெயர்
சூட்டிக்கொண்டவைகளில்
தேடியும்
வினவியும் பயனில்லை

தேடுதலில் சுற்றியும்
குழம்பியும்
பிடிபடாத காரணங்களின்
முனைப்பில்
தற்காலிகத்தைத்தள்ளிக்கொண்டு
நகர்கையில்
பொங்கும்
பெரும் விஷயங்களை
கிரகிக்க முடியாத
எதுவும்
எதுவெனத்தெரியவில்லை!

**S.மகேஷ்**
**சென்னை**

# அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை

புதிய எழுத்தாளர்களின் எண்ணப் போக்கை / கவித்துவத்தை/ கதை புனையும் ஆற்றலை/ செய்தி வெளிபாடுகளை நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றோம். புதியன படைக்கும் ஆர்வமிக்க எழுத்தாளர்களை இனம் கண்டு அவர்களின் இலக்கியப் பங்களிப்பை வெளிஉலகத்திற்குக் கொண்டு சென்று பெருமைப்படுத்துவதற்கும், இலக்கியத்தை வளர்ப்பதற்கும் நாங்கள் காத்திருக்கின்றோம். எழுத்தாளர்களை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து தமிழுக்குப் புதுஊக்கம் தர முயற்சிக்கின்றோம்.

இணைந்து செயலாற்றக் கீழ்கண்ட குழுமங்களாய் அழைக்கின்றோம்

- அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவை
- அமெரிக்க முத்தமிழ் தொலைக்காட்சி
- அமெரிக்க முத்தமிழ் சிறுவர் பேரவை
- அமெரிக்க முத்தமிழ் நூல் ஆய்வுப் பேரவை
- அமெரிக்க முத்தமிழ் ஹைக்கூப் பேரவை
- கலை உதயம் பதிப்பகம்
- அமெரிக்க முத்தமிழ் ஆசிரியர் பேரவை
- முத்தமிழ் நேசன் - இலக்கிய இதழ்

தமிழ்மாமணி முனைவர் இரா.உதயநேசன் அவர்கள் எழுதிய நூல்கள் அனைத்தும் கிடைக்குமிடம்:


கலை உதயம் பதிப்பகம்

எண்: 10, முதல் தெரு, ஸ்ரீ ராமாபுரம்

ஆம்பூர் 635802

திருப்பத்தூர் மாவட்டம்

போன் 9159698466



# உலகத் தமிழர்களே!

கலை – இலக்கியம் – சமூகவியல் – நாட்டுப்புறவியல்
உள்ளிட்ட
இணைய வழிப் படிப்புகளில்
இணைய வாருங்கள்!

உலக அரங்கில்
தனியாய் ஒரு
உன்னத உலகம்!

தமிழே நமது உயிர் மொழி!– அது
தமிழரின் உயர்வுக்கு ஒரே வழி!

## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்

விபரங்களுக்கு:

www.americamutamiluniversity.org